தஞ்சை மன்னர் சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

சரசுவதி மகால் ஓர் அறிமுகம்

*

1979 நவம்பர் 18, 19 தேதிகளில்

ஓலைச்சுவடிகள் வெளியிடுவது பற்றிய

"கருத்தரங்கில்"

தஞ்சை சரசுவதி மகால் நிருவாகக்குழுத் தலைவர்

திரு. **தொ. கங்கப்பா,** I.A.S.,

அவர்களால் வெளியிடப்பட்டது.

*

பதிப்பகம் :

சரசுவதி மகால் நூல் நிலைய அச்சகம், தஞ்சாவூர்.

சரசுவதி மகால் நூலகம்

கலைமகள் உறைந்திடும் கவின்மிகு ஆலயங்கள் பலப்பல. அவற்றுள் திலகமெனத் திகழ்வது தஞ்சையில் உள்ள "சரசுவதி மகால் நூலக"மே. 'தெட்சிணமேரு' என்ற தஞ்சைப் பெருங்கோயில், உலக மக்களை எந்த அளவு கவர்ந்துள்ளதோ அந்த அளவு இந்த நூலகமும் அவர்களைத் தம்பால் ஈர்த்துள்ளது. இதற்குக் காரணம் இது ஒரு தேசிய ஒருமைப்பாட்டு நூலகமாய்த் திகழ்வது மட்டுமின்றி அனைத்துலக சமுதாயம் முழுவதற்கும் பயன்படும் வகையிலும் அமைந்துள்ளமைதான். பெருமைமிகு இந் நூலகத்தின் வரலாற்றுச் சிறப்புகள் முழுமையும் எழுத்தில் வடிப்பது இயலாத ஒன்று.

தஞ்சை நாயக்கர்கள் காலத்தில் ... ...

தஞ்சையை ஆண்ட மன்னர்கள் வழியில் சோழர்களுக்குப் பிறகு அவர்களுக்கு இணையான ஆட்சியை நடத்தியவர்கள் தஞ்சை நாயக்கர்களே ஆவர். செவ்வப்ப நாயக்கனில் தொடங்கி செங்கமல தாசு ஈறுக, கி. பி. 1532 லிருந்து கி. பி. 1675 வரை இவ்வமிசத்தினர் ஆண்டனர். இவர்களில் தலையாய பணிபுரிந்த செம்மல் விஜயரகுநாத நாயக்கர் ஆவார். இவர் ஓர் சிறந்த கல்விமான் மட்டுமின்றி இசைவாணர் என்பதும் வரலாறு கூறும் உண்மைகள் ஆகும். இரகுநாதனின் மகனான விஜயராகவ நாயக்கனால் தெலுங்கு மொழியில் எழுதப்பட்ட இரண்டு அரிய நூல்கள் இன்றும் இந்நூலகத்தில் உள்ளன. இதில் விஜயரகுநாத நாயக்கரின் காலத்தில் தஞ்சை அரண்மனை எவ்வாறு இருந்தது என்பது பற்றியும், தலைசிறந்த பன்மொழிப் புலவர்கள் ஆதரிக்கப்பட்டதும், தமிழ், தெலுங்கு மற்றும் வடமொழியில் எண்ணற்ற நூல்கள் எழுதப்பட்டன போன்ற பல்வேறு தகவல்களை அறிய முடிகிறது. மேலும் இம்மன்னரது காலத்தில் எழுதப்பட்ட

பல்வேறு சுவடி நூல்கள் இந்நூலகத்தில் இன்றும் இடம் பெற்றுத் திகழ்வதால் நாயக்கர்கள் காலத்திலேயே தஞ்சை அரண்மனையில் கலைமகளின் அற்புதக் கலைக்கோயில் ஒன்று உருவாகத் தொடங்கிற்று என்பதை அறிகிறோம்.

மராட்டிய மன்னர்கள் காலத்தில் ... ...

தஞ்சை நாயக்கர்களைப் போலவே, பொன்னி நாட்டின் இப்புனித பூமியை மேலும் புனிதமடையச் செய்த பெருமை மராட்டிய மன்னர்களையே சாரும். கி. பி. *1676*-ல் தஞ்சையின் மன்னனாக முடிசூடிய ஏகோஜி என்னும் வெங்கோஜியினால் துவக்கப்பட்ட இவ்வமிசம், கி.பி. *1855*ல் ஆங்கிலேயர்கள் தஞ்சையைக் கைப்பற்றும்வரை ஆட்சி செலுத்தியது. இக்காலம்தான் கலைமகள் இத்திருக் கோயிலில் பூரண பொலிவுடன் கொலுவில் அமர்ந்த பொற்காலமாகும்.

இம்மராட்டிய மன்னர்கள் வரிசையில் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள் கி. பி. *1684*-ல் அரியணை ஏறிய இரண்டாம் ஷஹாஜியும், கி. பி. *1712*-ல் அரியணையில் அமர்ந்த முதல் சரபோஜியும், கி. பி. *1728*-ல் முடிசூடிய துக்கோஜியும், கி. பி. *1798*-ல் தஞ்சைத் தரணியை ஆளப்புகுந்த இரண்டாம் சரபோஜி மன்னரும் ஆவர். ஷஹாஜியைத் தமிழ் நூல்கள் "சகசி மன்னன்" என்றே குறிப்பிடுகின்றன.

தலைசிறந்த இலக்கியப் பித்தனாய்த் திகழ்ந்த இம்மன்னன் தானே எழுதிய நூல்கள் பல. இவற்றுள், தெலுங்கில் எழுதப்பட்ட திருவாரூர் தியாகேசப் பெருமான் பற்றிய கீர்த்தனங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். இந்நூல்கள் இன்றும் சுவடிகளாக இங்கு உள்ளன. இது இந்நூலகத்தின் தலையாய பெருமைகளுள் ஒன்றாகும்.

18-ம் நூற்றாண்டின் "போஜன்" என அழைக்கப்பட்ட இம்மன்னன்காலத்தில் தமிழ், தெலுங்கு, மராத்தி,

வடமொழி போன்ற பல்வேறு மொழிகளில் எண்ணற்ற இலக்கியங்கள் தோன்றின. தியாகேசர் குறவஞ்சி, அதிரூபவதி கல்யாணம், சந்திரகாச விலாச நாடகம், விஷ்ணுசாஹராஜ விலாசம், பூலோக தேவேந்திர விலாசம் போன்ற தமிழ் நூல்கள் மிகவும் குறிப்பிடத் தக்கவை யாகும்.

இதைப்போன்று வடமொழியில் தர்மாகூதம், திரிபுர விஜய சம்பு, ஆசார நவநீதம், ஸ்த்ரீ தர்மம், ராகவாப்யு தயம், முகுந்த விலாசம், நடேச விலாசம், ஸ்ரீ இராமச்சந்திரோதய காவ்யம், குசலவவிஜய நாடகம், ஜானகி பரிணயம், சிருங்கார திலகம் போன்றவை குறிப்பிடத் தக்கவையாகும். பிறநாடுகளில் இருந்து மருத்துவர்களை எல்லாம் அழைத்து, ஆக்கம் அளித்து, மருத்துவ நூல்கள் பலவும் எழுதச் செய்துள்ளார்.

இசைத் துறையில் தேர்ச்சிபெற்று விளங்கிய இம்மன்னர், பல இசை ஆய்வு நூல்கள் தோன்றக் காரண மாகவும் திகழ்ந்துள்ளார். மராத்தி மற்றும் இந்தி மொழி நூல்கள் பலவும் இந்நூலகத்தில் இடம்பெற வகை செய்தார்.

வரலாற்றில் ஓர் வைரம் ... ...

இந்திய நாடே பெருமை கொள்ளக்கூடிய ஓர் சான்றோனாய் வாழ்ந்து, 'சரசுவதி மகால்' எனும் இந் நூலகத்தின் பெருமையை, உலக முழுதும் அறியச்செய்து இறவாப் புகழ் அடைந்த ஓர் வரலாற்று வைரம், மராட்டிய குல திலகம்; மாமன்னர் இரண்டாம் சரபோஜி மன்னரே யாவார். இளம் வயதிலேயே 'ஸ்குவார்ட்ஸ்' என்ற ஆங்கிலேயப் பாதிரியாருடன் நெருங்கிய தொடர்பு கொண்டதால், பன்மொழி வித்தகராகவும், அறிவியல் வல்லுநராகவும் திகழ்ந்தார். உலக நாடுகளின் கலாச்சாரங்கள் அனைத்தையும் புரிந்துகொண்ட காரணத் தால், அகிலம் புகழும் இந்நூலகத்தைத் தன் இலட்சிய

குறிக்கோளாகக் கொண்டு வளர்த்தார். இதனால், உலகில் இலக்கிய முன்னேற்றம் அடைந்த நாடுகளில் பிரசுரிக்கப் பட்ட நூல்களை எல்லாம் தருவித்து, இந்நூலகத்தில் இடம்பெற வகை செய்தார். இவ்வாறு, இவரால் சேகரிக்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கை 5,000 ஆகும். அனைத்து நூல்களிலும், முதல் பக்கத்தில் இப்பெருந்தகை யாளரது கையொப்பம், ஆங்கில ஆண்டு இவைகளுடன் காணப்படுவதுடன், நூல்களின் பல்வேறு பக்கங்களில் அவர் எழுதிய குறிப்புகளையும் காணும்போது மெய் சிலிர்க்கத்தான் செய்யும்.

இந்திய நாட்டில் அச்சகங்கள் தோன்றுவதற்கு முன்பே கற்களைக்கொண்டு உருவாக்கிய அச்சு முனைகளைக் (Types) கொண்டே, கையால் தயாரிக்கப்பட்ட காகிதங்களில் பல நூல்களை அச்சிடச்செய்த பெருமை இம்மன்னனையே சாரும். அவ்வாறு அச்சிடப்பட்ட நூல்கள், இன்றும் இந்நூலகக் காட்சிக் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவர்தம் சான்றாண்மையையும், நூலகம் பேணுவதில் கொண்ட சீர்மையையும், இவர் காலத்தில் இந்திய நாடு வந்து சென்ற வெளிநாட்டுப் பயணநூலாசிரியர்களின் குறிப்புகளில் காணலாம். இந்நூலகத்துடன் இணைந்து செயல்படுமாறு "தன்வந்திரி மகால்" என்ற வைத்திய ஆய்வுக் கழகத்தை நிறுவி, பல வைத்திய அறிஞர்களுக்கு ஆக்கம் அளித்து, பல அரிய நூல்களை எழுதவும் செய்தார். இவ்வகையில், இன்று தமிழில், பல்வேறு வைத்திய நூல்கள், சுவடி வடிவில் நூலகத்தில் இடம் பெற்றுள்ளன. மன்னர் சரபோஜியின் புகழ் மணத்தைப் பரப்பிக்கொண்டுள்ள இத்தகைய சுவடிகள் எல்லாம், இன்று மேல்நாட்டு மருத்துவ ஆராய்ச்சி யாளர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளமைகண்டு ஒவ்வொரு இந்திய குடிமகனும் பெருமைகொள்ளமுடிகிறது.

சித்த மருத்துவ இயலில் பயன்படுத்தப்படும் பல்வேறு மூலிகைகளை எளிதில் இனம் கண்டுகொள்ள, அவைகளை நூல்களில் வண்ண ஓவியங்களாகத் தீட்டி, குறிப்புகளுடன்

வைத்துள்ளமை செயற்கரிய செயலாகும். இம்மன்னனின் தன்வந்திரி மகாலில் தயாரிக்கப்பட்ட மருந்துகளின்மேல் பெயரும் – தயாரித்த ஆண்டும் குறிக்கப்பட்டுக் காணப்படுகின்றன.

கண் மருத்துவம் ... ...

பலருடைய நோய்களைத் தானே வைத்தியராக இருந்து குணப்படுத்திய இவர், கண் மருத்துவத் துறையில் கண்புறை (Cataract)க்குச் செய்த அறுவை சிகிச்சை முறைகளும், அவை நாளுக்குநாள் அடைந்த மாற்றங்களும், குணமடைந்ததும் எழுதிவைத்துள்ளார். இவ்வாறு சிகிச்சைமேற்கொண்ட நோயாளிகள், நலம்பெற்றுத் திரும்பும்போது அவர்களுக்கு அரசு சன்மானமாக ரூபாய் இரண்டு வழங்கப்பட்டதை விளக்கும் அரிய கோப்புக்கள் (Documents) இன்றும் இந்நூலகத்தில் உள்ளன. கண் மருத்துவம் பற்றி விளக்கும் 'நயனரோக நிதானம்' என்னும் வடமொழிச் சுவடி நூல், இந் நூலகத்தின் முத்துக்களில் ஒன்று.

வானவியல், சோதிட இயல், கணிதம், மருத்துவம், விஞ்ஞானம், இசை இலக்கியங்கள், தத்துவம் போன்ற துறைகளின் அரிய நூல்களை அனைவருக்கும் பயன்படச் செய்த மன்னர் சரபோஜியின் தொண்டு, இந்திய வரலாற்றில் ஈடு இணையில்லாததொன்றாகும்.

நூலகமும் - காட்சியரங்கமும் ... ...

தஞ்சை அரண்மனையின் அங்கமாக உள்ள இந்த நூலகத்தின் ஓர் பகுதி, காட்சி அரங்கமாகவும் திகழ்கிறது. இங்குள்ள சுவடி நூல்கள், கையெழுத்துப் பிரதிகள், வண்ண ஓவியங்கள், பிரெஞ்சு அறிஞர் சார்லஸ்-லபானின் பரிணும வளர்ச்சி பற்றிய ஓவியத்தொகுப்பு, கஜசாத்திரம், அசுவ சாத்திரம், ஓவியங்களுடன் உள்ள ரிக்வேதம், பாகவதம், பாரதம், இராமாயணம், போன்றவை மிக அரிய படைப்புகளாகும்.

இந்நூலகத்தில் ஓலைச்சுவடி நூல்களாக வடமொழியில் 12,480-ம், தமிழில் 2,122-ம், தெலுங்கில் 766-ம் உள்ளன. கையெழுத்துக்காகிதப் பிரதி நூல்களாக வடமொழியில்

20,343-ம், மராத்தியில் 2,919-ம் உள்ளன. இவை மட்டுமன்றி மன்னர் சரபோஜி அவர்களால் சேகரிக்கப்பட்ட அச்சு நூல்கள் மட்டுமே 5000-த்திற்கு மேற்பட்டவையாகும். அச்சு நூல்களாக ஆங்கிலம், வடமொழி, தமிழ், வங்காளி, பிரெஞ்சு, குஜராத்தி, மற்றும் பிறமொழிகளில் மொத்தம் 28,496 நூல்கள் தற்போது உள்ளன. மராத்திய மன்னர்களின் அரண்மனை அலுவலகக் குறிப்புகள் அடங்கிய 'மோடி' எனும் மராத்தி சுருக்கெழுத்தால் எழுதப்பட்ட பலநூறு கட்டுக்கள் அடங்கிய கையெழுத்துப் பிரதிகள் இந்நூலகத்தில் மட்டுமே உள்ள சிறப்பு அம்சமாகும்.

பொதுமக்கள் படிப்பதற்கான தனி அரங்கும் உள்ளது. இதுவரை எங்குமே பதிப்பிக்கப்படாத நூல்களாக, பல்வேறு மொழிகளிலுமாக மொத்தம் 175 நூல்கள் அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளன. தனித்த விற்பனைப் பகுதியும் இந்நூலகத்திலேயே செயல்படுகிறது. கடிதமூலம் தொடர்பு கொள்பவர்களுக்கும் நூல்கள் அனுப்பப்படுகின்றன. இந்நூலகத்திற்கென்றே தனித்த அச்சகமும் துவங்கப்பட்டு தற்போது நூல்கள் பல அச்சிடப்பட்டு வெளிவருகின்றன.

நுண்ணியல் புகைப்படப் பிரிவு :- (Micro Photo Unit)

சுவடிகளாகவும், கையெழுத்துப் பிரதிகளாகவும் உள்ள இக்கலைக் கருவூலத்தின் நூல்கள் கால வெள்ளத்தில் அழியாமல் பாதுகாக்க மிக நவீன பாதுகாப்பு முறைகள் (Chemical Preservations) பின்பற்றப்படுகின்றன. மேலும், பல லட்சக்கணக்கான ரூபாய் முதலீட்டில் நுண்ணியல் புகைப்படச் சாதனங்கள் வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப்பட்டு, அரிய நூல்கள் எல்லாம் நுண்படச்சுருள்களில் பதிவு செய்து பாதுகாக்கும் பிரிவும் துவங்கப்பட்டு செயலாற்றுகின்றது. இதனால் ஆராய்ச்சி அறிஞர்களுக்குத் தேவையான நூல்கள் புகைப்படங்களாகவும், நுண்படச் சுருள்களாகவும் பெறச் சிறந்த வாய்ப்புக் கிட்டியுள்ளது.

தமிழ், வடமொழி (கிரந்தம், தேவநாகரி), தெலுங்கு, மராட்டி, இந்தி போன்ற பல்வேறு மொழி நூல்களைப் பல நூறு ஆண்டுகளாகக் கொண்டு திகழும் இந்நூலகத்தை ஒரு தேசிய ஒருமைப்பாட்டு நூலகம் என்றே குறிப்பிடலாம். ஆய்வு நூலகமாகத் திகழும் (Oriental Research Library) இந்நூலகத்தில் பல அரிய ஆய்வு செய்யப்பட வேண்டிய நூல்களின் எண்ணிக்கை ஏராளம். உதாரணமாக வடமொழியில் உள்ள 'மேகமாலா மஞ்சரி' எனும் நூல் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்நூலில் மேகக் கூட்டங்கள், விண்மீன்கள் போன்றவை குறிப்பிடப்பட்டு, மழை பெய்யும் அளவு, வானிலை முன்னறிவிப்பு போன்ற பல்வேறு அம்சங்கள் தெளிவுபட உள்ளன. வானிலை ஆய்வில் இத்தகையதோர் பழமையான நூல் உள்ளது வியப்பூட்டுகிறது. இதேபோன்று தமிழில் உள்ள "கூப சாத்திரம்" நிலத்தடி நீர் பற்றிய ஆய்வில் ஓர் அரிய பொக்கிஷமாகும். 'பூமிசல்லியம்' எனும் பிறிதோர் தமிழ் நூல், நிலத்தடி மூலகங்கள் பற்றி விளக்குகின்றது.

இத்தகைய அரிய, சமுதாயத்திற்குப் பயன்படக்கூடிய நூல்களையெல்லாம் வெளிக்கொணர, மாவட்ட ஆட்சியாளரைத் தலைவராகக்கொண்ட நிருவாகக் குழுவினர் பல்வேறு சீரிய திட்டங்களைத் தீட்டியுள்ளனர். இதன் முதல் அங்கமாக, இம்மாதம் 18, 19-ம் நாட்களில் பல்வேறு துறைகளைச்சார்ந்த அறிஞர்களையும், ஆர்வமுள்ள பலரையும் அழைத்து, கருத்தரங்கம் ஒன்று நடைபெற உள்ளது. மேதகு 'தமிழக ஆளுநர்' அவர்கள் துவக்கி வைக்கவும் இசைந்துள்ளார்கள். இந்நூலகத்தின் வாயிலாகக் கிடைக்கும் ஒவ்வொரு பயனுள்ள செயலும் உலக சமுதாயம் அனைத்திற்குமே பயன்படக்கூடிய ஒன்று என்பது உண்மை.